# அரையாண்டு திருப்புதல் தேர்வு

# தமிழ்

***8ஆம் வகுப்பு*** **நேரம்: 3.00 மணி**

**மதிப்பெண்கள்: 100**

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (15×1=15)

1. 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______ _.
அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால் இ) ஐம்பது + பால்
ஈ) ஐ + பால்

2. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள்
_____. அ) க், ங் ஆ) ச், ஞ் இ) ட், ண் ஈ) ப், ம்

2. செவ்விந்தியர்கள் நிலத்தைத் _____ மதிக்கின்றனர்.
அ) தாயாக ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ___ _.
அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க ஈ) வாழிய

4. நீலகேசி கூறும் நோயின் வகைகள் _______.
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

5. உடல்நலம் என்பது _______ இல்லாமல் வாழ்தல் ஆகும்.
அ) அணி ஆ) பணி இ) பிணி ஈ) மணி

6 உடல் எடை அதிகரிப்பதா ல் ஏற்படும் நோய்களுள் ஒன்று _____.
அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) புற்றுநோய்
ஈ) இரத்தக் கொதிப்பு

7. கீழ்க்காணும் சொற்களில் பெயரெச்சம் _____.
அ) படித்து ஆ) எழுதி இ) வந்து ஈ) பார்த்த

8. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் _____.
அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார் இ) வ உ. சிதம்பரனார்
ஈ) பெருஞ்சித்திரனார்

9. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது _____.
அ) விளக்கு ஆ) கல்வி இ) விளையாட்டு ஈ) பாட்டு

10. உடனிகழ்ச்சிப் பொருளில் ____________ வேற்றுமை வரும்
அ) மூன்றாம் ஆ) நான்காம் இ) ஐந்தாம் ஈ) ஆறாம்

11. மறைபொருளைக் காத்தல் _____ எனப்படும்.

அ) சிறை ஆ) அறை இ) கறை ஈ) நிறை

12. கால் + இறங்கி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
அ) கால்லிறங்கி ஆ) காலிறங்கி இ) கால் இறங்கி ஈ) கால்றங்கி

13. ஐந்தாம் உலகத் தமிழ்மாநாடு நடைபெற்ற இடம் _____
அ) திருச்சி ஆ) சென்னை இ) மதுரை ஈ) கோவை

14. அடி _____ வகைப்படும்.
அ) இரண்டு ஆ) நான்கு இ) எட்டு ஈ) ஐந்து

## II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி. 17 கட்டய வினா (4×2=8)

15. மூவேந்தர்களின் காலம் குறித்து எழுதுக
16. "இறைக்கு" என முடியும் திருக்குறளை எழுதுக
18. அயோத்திதாசரிடம் இருந்த ஐந்து பண்புகள் யாவை?
19. பனையோலையால் உருவாக்கப்படும் பொருள்கள் யாவை?
20. பகைவர்களிடம் நாம் நடந்துகொள்ள வேண்டிய முறை யாது?
21. ஓவிய எழுத்து என்றால் என்ன?

## III. ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி (5×2=10)

22. பிழை திருத்தி எழுதுக:
அ) அதைச் செய்தது நான் அன்று.
ஆ) பகைவர் நீவீர் அல்லர்
23. வினைமுற்று என்றால் என்ன?
24. கலைச்சொல் எழுதுக: அ) Locust ஆ) A tisan
25. இரண்டு தொடர்களை ஒரே தொடராக்குக
அ) அறநெறிகளைக்கூறும் நூல்களைக் கற்க வேண்டும். அவை கூறும் கருத்துகளைப் பின்பற்ற வேண்டும்.
26. சரியான மரபுச் சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.
அ) ஆ ______ (நிரை / மந்தை)
ஆ) பால் _____(குடி/பருகு)
27. உவமைத் தொடர்களைப் பயன்படுத்தித் தொடர் அமைக்க: உடலும் உயிரும் போல
28. சீர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## IV. இரண்டு வினாக்களுக்கு விடையளி (2×3=6)

29. நோய்கள் பெருக காரணம் என்ன?
30. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?
31. திருக்கேதாரத்தைச் சுந்தரர் எவ்வாறு வருணனை செய்கிறார்?

## V. இரண்டு வினாக்களுக்கு விடையளி. 34 கட்டய வினா (2×3=6)

32. புத்தியைத் தீட்டி வாழ வேண்டிய முறைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
33. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.
34. "பேர்தற்கு" என தொடங்கும் பாடலை எழுதுக

## VI. இரண்டு வினாக்களுக்கு விடையளி. (2×3=6)

35. எழுவாய் வேற்றுமையை சான்றுடன் விளக்குக
36. இயல்பு புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
37. தொகைநிலைத் தொடர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி (5×5=25)

38. அ) ஒடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?

(அல்லது)

ஆ) நோயின் வகைகள் அவற்றைத் தீர்க்கும் வழிகள் பற்றி நீலகேசி கூறுவன யாவை?

39. அ) இருப்பிடச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ) விளையாட்டுப்போட்டியில் வெற்றி பெற்ற உன் நண்பனுக்கு பாராட்டுக் கடிதம் எழுதுக

40. மரபுப் பிழையை நீக்கி எழுதுக.

சேவல் கொக்கரிக்கும் சத்தம் கேட்டுக் கயல் கண் விழித்தாள். பூப்பறிக்க நேரமாகி விட்டதை அறிந்து தோட்டத்திற்குச் சென்றாள். அங்கு மரத்தில் குயில் கரைந்து கொண்டிருந்தது. பூவைப் பறித்ததுடன், தோரணம் கட்ட மாவிலையையும் கொய்து கொண்டு வீடு திரும்பினாள். அம்மா தந்த பாலைக் குடித்துவிட்டுப் பள்ளிக்குப் புறப்பட்டா ள்.

41. பின்வரும் பத்தியில் உரிய இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.

நூல் பல கல் என்பர் பெரியோர் அறிவை வளர்க்கும் நூல்கள் அனைத்தையும் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியுமா முடியாது நூலகங்கள் இக்குறையை நீக்க உதவுகின்றன பல்வேறு துறைகளைச் சேர்ந்த அனைத்து நூல்களும் நிறைந்த இடம் நூலகம் ஆகும் நூலகத்தின் வகைகளாவன மையநூலகம் மாவட்ட நூலகம் கிளை நூலகம் ஊர்ப்புற நூலகம் எனக்குப் பிடித்த நூல்களுடன் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைத்தாலும் மகிழ்ச்சியடைவேன் என்றார் நேரு ஆகவே நூலகத்தின் பயன் அறிவோம் அறிவு வளம் பெறுவோம்

42. "வழிவர்" என தொடங்கும் பாடலை எழுதுக

## VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளி (3×8=24)

43. அ) எழுதுக்களின் தோற்றம் குறித்து எழுதுக

(அல்லது)

ஆ) கொங்கு நாட்டின் உள்நாட்டு, வெளிநாட்டுவணிகம் குறித்து எழுதுக.

44. அ) 'காலம் உடன் வரும்' – கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) 'வெட்டுக்கிளியும் சருகுமானும்' கதையைச் சுருக்கி எழுதுக.

*45. அ)* கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

<u>நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்</u>

*முன்னுரை – நோய் வரக் காரணங்கள் – நோய் தீர்க்கும் வழிமுறைகள் – வருமுன் காத்தல் – உணவும் மருந்தும் – உடற்பயிற்சியின் தேவை – முடிவுரை*

*(அல்லது)*

*ஆ) "நான் விரும்பும் கவிஞர்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக*

***